# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

# M.C.O.P. No. 130/2019

PW2 சரவணன் நாள் 05.07.2022

**2–ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த ரோடு தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திற்கு பக்கத்தில் தடுப்பான்கள் வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்றேன் என்றால் சரிதான். அந்த ரோட்டின் நடுவில் தடுப்பு சுவர் இருந்ததது என்றால் சரிதான். ரோட்டின் நடுவே வைக்கப்பட்டிருந்த தடுப்பு ரோட்டின் வடக்கு பக்கம் வைக்கப்பட்டிருந்தது. எனவே வாகனங்கள் ரோட்டின் நடுவிலுள்ள தடுப்பு சுவரை ஒட்டி தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். லாரி நீளமான வாகனம் என்றால் சரிதான். என்னிடம் ஓட்டுநர் உரிமம் உள்ளது. இறந்துபோனவர் என்மீது பின்னால் அமர்ந்து வந்தார் என்றால் சரிதான். எனக்கு கையிலும் காலிலும் காயம் ஏற்பட்டிருந்தது. எனது இருசக்கர வாகனத்தின் முன்பக்க முகப்பு விளக்கு மட்டும் தான் சேதம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பின்பக்க இன்டிகேட்டர் , மற்றும் பக்கவாட்டில் சேதம் ஏற்பட்டுள்ளது. லாரி ரோட்டில் வைக்கப்பட்டிருந்த தடுப்பில் பாதி கடந்துவிட்டநிலையில் நான் என்னுடைய வாகனம் செல்ல இடைவெளி இருக்கும் என்று கருதி லாரியை ஒட்டி சென்று தடுப்பானில் மோதி கீழே விழுந்துவிட்டோம் என்றால் சரியல்ல. என் பின்னால் அமர்ந்து வந்த நபரின் மீது லாரியின் பின் சக்கரம் தான் அவர் மீது ஒரசி சென்றது

என்றால் சரிதான். நான் இருப்பது மத்திய காவல் துறையில் பணிபுரிகிறேன். இறந்து போனவரும் அதே துறையில் தான் பணிபுரிந்தார். விபத்து நடந்த இடம் எங்கள் பட்டாளியண் காவல் ஆகியவை ஒரே காவல் நிலையத்திற்கு உட்பட்டது என்றால் சரிதான். நான் மத்திய காவல் துறையில் பணிபுரிவதால் என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி லாரி ஓட்டுநர் மீது வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இறந்துபோன நபர் தலைகவசம் அணிந்திருந்தார். அவர் தலைகவசம் அணியவில்லை என்றும் நான் தலைகவசம் அணிந்திருந்ததார் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு என்னுடைய அஜாக்கிரதை தான் காரணம் என்றால் சரியல்ல. வருடத்திற்கு ஒரு தடவை எங்களுக்கு கூடுதல் சம்பளம் கொடுப்பார்கள் என்றால் சரிதான். குழந்தைகள் படிப்பிற்காக கொடுப்பார்கள்.

**மறுவிசாரணை**

இல்லை.